REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 27உ வியாழன் (11—7—57) ★ ★ வெளியூர்: ஆனி 28உ வெள்ளி (12—7—57) [இதழ் 22

உலகின் 'மிகப் பெரிய நகரம்'!

ஜப்பான் நாட்டுத் தலைநகரான டோக்கியோதான் உலகின் மிகப் பெரிய நகரமாம்!

இந்த ஆண்டு ஜுன் 1-ந் தேதி கணக்குப்படி டோக்கியோவின் மக்கள் தொகை 84,71,637 என்றும் விரிவாகி வரும் பிறப்பு விகிதப்படி இப்போது கணக்கிட்டால் 85 இலட்சம் இருக்கக்கூடுமென்றும் கூறப்படுகிறது.

நியூயார்க், லண்டன் நகரங்களின் மக்கள் தொகையோ, முறையே 81,50,000; 83,46,145 தான் என்றும் கூறப்படுகிறது.

'முதல் திட்டத்தால் ஏழை பெற்ற பலன் என்ன?'

'எல்லாம் தெரிந்த' நிதி அமைச்சர் ஏன் பதிலளிக்கவில்லை?'

'தன் கட்சி செயலாளரின் கருத்தை மறுத்துரைப்பதுதானே?'

'ஆசிரியராக விரும்பும் சுப்பிரமணியம் மேடையில் பேசுவதற்கு பழகிக்கொள்ளட்டும்'

சென்னையில் அண்ணா முழக்கம்

"'முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஏழை மக்களுக்கு நன்மை செய்ததா?'—என்று நான் சட்டசபையில் கேட்டேன். அவருடைய பேச்சில் அவர் சொன்ன பதில், 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பலன் ஏற்பட்டிருக்கிறது' என்கிறார். யார் இல்லை என்கிறார்கள்? நான் கேட்கும் கேள்வி, 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினுல் ஏற்பட்ட பலன் ஏழைக்குக் கிடைத்ததா?—என்பது! 'சாப்பிட்டாயிற்ற?'—என்று கேட்டால், 'ஆம், ஆயிற்றே' என்று விட்டு முதலாளி சொல்வதற்காக நான் கேட்கவில்லை; நான் கேட்டது அங்கே பணியாற்றுகின்ற பாட்டாளி, அவனைப் பார்த்துக் கேட்கிறேன்—'அப்பா, சாப்பிட்டாயா?'—என்று! ஏப்பம் விட்டுக்கொண்டே முதலாளி சொல்கிறான்—'ஓ, சாப்பிட்டாயிற்றே!'—என்று! இதனுலா எனக்குத் திருப்தி இருக்கும்?

"நாம் நிதி அமைச்சர் சுப்பிரமணியத்திடம் எதிர்பார்க்கும் பதில், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், 'இத்தனை ஆயிரம் குடிசைகள் ஓட்டு வீடுகள் ஆயின; இத்தனை இலட்சம் பேருக்குப் புதிதாக வேலை கொடுத்தோம்; இரண்டு ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருந்தவன் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பின் நான்கு ரூபாய் சம்பாதிக்கிறான்; எண்ணெய் காணுத தலைக்கு இன்றையத்தினம் எண்ணெய் கிடைத்திருக்கிறது; கல்வி இல்லாத மக்களுக்கு நல்ல கல்விச் சாலைகள் திறக்கப்பட்டன' என்று புள்ளிவிவரம் தருவார் என்று பார்த்தால், அவர் சொன்ன பதில், 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பலன் ஏற்பட்டிருக்கிறது' என்பதுதான்!"

என்று அண்ணா அவர்கள், சென்னை-கோடம்பாக்கத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் குரலெழுப்பினர்; அதே நேரத்தில், 'மேடைப் பேச்சு' பற்றிய நிதி அமைச்சரின் கூற்றுக்கும் பதிலளிக்கையில் அண்ணா அவர்கள் தொடர்ந்து கூறியதாவது:—

"திருவிழாவிற்குப் போய்வருகிறோம்; கள்ளனும் வருகிறான்—கான்ஸ்டபிளும் வருகிறான்; இரண்டு பேரையும் இரண்டு நண்பர்கள் விசாரிக்கிறார்கள்—'என்னப்பா, திருவிழாவிற்குப் போனதில் நல்ல இலாபந்தானா?'—என்று! 'ஆமாம்' என்கிறான், கள்ளன்; 'என்ன இலாபம்?' என்று கேட்டால், 'எனக்கு, மூன்று பவுன் சங்கிலி கிடைத்தது' என்கிறான்! கான்ஸ்டபிளைப் பார்த்து, 'இலாபந்தானா?' என்று கேட்டால், அவனும் 'இலாபம் தான்' என்கிறான்; 'என்ன?' என்று கேட்டால், 'ஒரு கள்ளன் திருடிக் கொண்டு ஓடினான்; பிடிக்க உடனே ஓடினேன்; கீழே விழுந்துவிட்டேன்; சப்-இன்ஸ்பெக்டர் என்னைப் பார்த்து, 'பரவாயில்லை; நீ மெத்த கடுமையாக வேலை செய்திருக்கிறாய்' என்று பாராட்டினார்; அதிலே எனக்கு இலாபந்தான்' என்கிறான்! இரண்டுக்கும் பெயர் இலாபந்தான். நான் கேட்பது, 'யாருக்குப் பலன் கிடைக்க வேண்டுமோ அவனுக்குப் பலன் கிடைத்ததா?' என்பதுதான்!

"அதற்கு நிதி அமைச்சர் சொல்கின்ற பதில் எல்லாம், 'மேடைப் பேச்சு பேசாதே' என்பதுதான். மேடைப் பேச்சு பேசாமல், அவருடைய பேச்சு பேசினுல், இதை மறைக்கின்ற பேச்சுதான் வரும்.

"மேடைப் பேச்சு என்பது உள்ளத்தைத் திறந்து பேசு

மேடைப் பேச்சின்றி எந்த அரசியல்கட்சி முளைத்தது?

வது; இதயத்தைக் காட்டிப் பேசுவது; ஈவுஇரக்கத்தோடு பேசுவது; அந்தப் பேச்சிலே நான் கேட்டேன்.

"'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், ஏழைக்குப் பலன் கிடைக்கவில்லை' என்பதை நான் அல்ல—காங்கிரசில் இருக்கின்ற அகில இந்தியக் காங்கிரஸ் செயலாளர் ஸ்ரீமன் நாராயணன் அவர்கள் எழுதிய கட்டுரையை அங்கே படித்துக்காட்டினேன்.

"வக்துவகை இருந்தால், அறிவு தெளிவு இருந்தால், ஆணவத் துணிவு இருந்தால், ஸ்ரீமன் நாராயணன் சொன்னது முட்டாள்தனம்,' என்று பேசுவதுதானே? அவருடைய கட்சிக்காரர்; அவர் கட்சியின் செயலாளர்; அகில இந்தியாவுக்குச் செயலாளர்; அவர், பேச்சிலே அல்ல—எழுத்தில் எழுதிக் காட்டியிருக்கிறார்—'இந்த 10 வருட காலக் காங்கிரஸ் ஆட்சியில், ஏழையின் உள்ளத்தில் மகிழ்ச்சி இல்லை; முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் பலன் ஏழை மகனுக்குப் போய்ச் சேரவில்லை; ஏழைக்கும் பணக்காரனுக்கும் இருந்துவருகிற வித்தியாசம் 10 ஆண்டுகளில் குறையவில்லை,' என்று வெட்ட வெளிச்சமாக எழுதியிருக்கிறார். அதைப் பட்டவர்த்தனமாகப் படித்துக் காட்டினேனே—ஏன் அதற்குப் பதில் அளிக்கக்கூடாது? மேடைப் பேச்சிலே வேண்டாம்; உங்களுக்கு அனுபவத்திலே பிறந்திருக்கிற 'பார்லிமெண்டரி பாஷை'யில் பேசுவதுதானே?

"நான் கேட்ட கேள்விக்கு அவர் பதில் அளித்திருக்க வேண்டும்; இதைவிட்டுவிட்டு, அவர் சொன்னதென்ன? 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பலன் ஏற்பட்டிருக்கிறது—பலன் நிச்சயம் ஏற்படும்; ஆனுல், ஏற்படுகிற பலன் யாருக்கு என்பதுதான் பிரச்சினையே தவிர, பலன்—டாடாவுக்கு ஏற்பட்டிருக்கிறது; பிர்லாவுக்கு ஏற்பட்டிருக்கிறது; அண்ணாமலைச் செட்டியாரின் திருக்குமாரருக்கு ஏற்பட்டிருக்கிறது; ஆலை அரசர்களுக்கேற்பட்டிருக்கிறது; 'கள்ளமார்க்கெட்'டுக்காரருக்கும் கொள்ளை இலாபக்காரருக்கும் ஏற்பட்டிருக்கிறது; அதனுடைய—பலனுடைய பங்கை சென்ற தடவை தேர்தலில் காங்கிரஸ் கட்சியும் அடைந்து பலனையும் அனுபவித்திருக்கிறது. ஆனுல் இது அல்ல பிரச்சினை.

"மேடைப் பேச்சுக்கும் சட்டமன்றத்தில் பேசும் பேச்சுக்கும் ஏதோ ஒரு ஏறுமாறுன கருத்து இருப்பதாக நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தவறுகக் கருதுகிறார். உலகத்தில் நல்ல பெயர் எடுத்துள்ள அத்தனைபேரும் மேடைப் பேச்சில் நல்ல பெயர் எடுத்தவர்கள்தான்.

"சத்தியமூர்த்தி என்ற பெயரை நிதி அமைச்சர் கவனப்படுத்திக் கொள்வாரானுல், அவருக்கு அந்தத் தெளிவு ஏற்படுமென்று நினைக்கிறேன். சத்தியமூர்த்தி மேடையில் மிக அழகாகப் பேசக் கூடியவர். அதே மேடைப் பேச்சுதான், சட்டசபையில் அவர் பேசும்காலத்திலேயும் மக்களுடைய உள்ளத்தை உலுக்கியது.

"பண்டித ஜவகர்லால் நேருவின் தந்தையாரான மோதிலால் நேரு, மேடையில் பேசுவதில் சமர்த்தர், சட்டமன்றத்திலேயும் அந்த சாமர்த்தியம் பயன்பட்டது.

"சர். ஏ. இராமசாமி அவர்கள் வெளியில் பேசுவதிலும் நல்ல விற்பன்னர்; அந்த அருமையானவருடைய பேச்சுகள் சட்டமன்றத்திலேயும் பாராட்டப்படக் கூடியனவாக இருந்தன.

"சர். சி. பி. இராமசாமி அய்யர் வெளியிலே பேசுவதையும் வியந்து கேட்பார்கள்; அந்தப் பேச்சு, சட்டசபைக்கும் பயன்பட்டது.

"என்னை நான் அந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்வது ஆணவம் என்று கருதுவீர்கள். ஆனுல், நிதி அமைச்சருக்குச் சொல்வேன்—'நான் வேண்டாம்; நீங்கள் அந்தப் பட்டியலில் சேருவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள். மேடையில் நன்றாகப் பேசப் பழகிக் கொள்ளுங்கள்' என்று கேட்டுக் கொள்ளப்பிரியப்படுகிறேன். ஏதோ, மேடைப் பேச்சு கெட்டது என்பது போலவும், அது சட்டசபையில் பேசக்கூடாத ஒன்று போலவும், அந்த பஞ்சமா பாதகத்தை நாம் கையாள்வது போலவும் அவர் சட்டசபையில் கூறுகிறார்.

"எந்த அரசியல் கட்சி, மேடைப் பேச்சிலிருந்து முளைக்காமலிருக்கிறது? 'தரையில் செடி முளைக்கக்கூடாது; கையிலேயே மண்ணைப் போட்டு, அதில் விதை விதைத்து முளைத்துக் காட்டு' என்பதுபோல் மேடைப்பேச்சு வேண்டாம்; சட்டசபைக்கு வந்து, அவருடைய 'பட்ஜெட்' பிரசங்கத்தை எடுத்து ஆறும் பக்கத்தைத் திருப்புங்கள்; பன்னிரண்டாவது வரியில் பாருங்கள் — உரத்திற்காக ஒதுக்கியிருப்பது ரூ. 12,60,486; 'ஒரு இலட்சமல்ல—இரண்டு இலட்சமல்ல; மூன்று இலட்சமல்ல எட்டு இலட்சமல்ல—பத்து இலட்சமல்ல; ப...ன்...னிர...ண்...டு இலட்சம்!'—இப்படிப்பேசச்சொல்கிறாரா? இதை சட்டமன்றப் பேச்சென்று அவர் கருதுவாரானுல், சட்டமன்றத்தைப்போல் நாட்டு மக்களுக்கு அருவருப்பைத் தரும் ஸ்தாபனம் உலகில் வேறு எதுவும் இருக்காது."

'டில்லியிடம் சென்னை பிச்சை எடுப்பதை அரசாங்கம் நிறுத்துமா?'

சட்டசபையில் மு. கருணாநிதி கேள்வி

சென்னை, ஜுலை 11—

பிச்சைக்காரர்களுக்காக சென்னையில் மூன்று விடுதிகளும், உதகையில் ஒரு விடுதியும் திறக்கப்பட்டுள்ளது என்றும், மற்றும் 17 நகரசபைகள் பிச்சைக்கார விடுதிகள் நடத்த ஏற்பாடு செய்துள்ளது என்றும் சட்டசபையில் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

தருமம் செய்வதைத் தடை செய்வதற்குச் சட்டம் போடுவதைவிட, 'பிச்சை எடுப்பது கூடாது,' என்று சட்டம் ஏற்படுத்தலாம் என்றும், பிச்சைக்காரர்களைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்பதே அரசாங்கத்தின் திட்டம் என்றும் அமைச்சர் மேலும் கூறினர்.

ஏ. கோவிந்தசாமி:—"நேரு மதுரை வந்தபோது, பிச்சைக்காரர்களைப் போலீசார் பிடித்துக்கொண்டு போய்விட்டார்களே, ஏன்? நேருவின் கண்ணில் பிச்சைக்காரர்கள் தென்படக்கூடாது என்பதற்காகவா?"

'கேள்வியைக் குறிப்பாகக் கேட்கவேண்டும்,' என்று கூறி அமைச்சர் பதிலளிக்காமல் தட்டிக்கழித்துவிட்டார்.

மு. கருணாநிதி:—"பிச்சைக்காரர்கள் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடும் சென்னை அரசாங்கமே டில்லியிடம் பிச்சை எடுக்கிறதா? அதையாவது அரசாங்கம் நிறுத்துமா?"

அமைச்சர்:—'முன்பே சொன்னேன்—பிச்சை எடுப்பதில் பல வகை உண்டு என்று!'

'மனிதனுக்கு சினிமா மிகவும் அவசியம்'

அமைச்சர் பக்தவத்சலம் அறிவிப்பு

சென்னை, ஜுலை 10—

சென்னை சட்டசபையில் இன்று வரவு-செலவுத் திட்டத்தின் கலால் இலாகா மானிய விவாதத்தின் முடிவுரையில் அமைச்சர் பக்தவத்சலம், சில 'நயே காங்கிரஸ்'காரர்கள் சினிமாவைத் தாக்கிவருவதற்கு நேர் மாறுன கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்; அதன் சாரமாவது:—

"சினிமா மனிதனுக்கு மிகவும் அவசியம். இது கிராமங்களில் கூட அதிகமாக வேண்டும். மக்கள் சினிமாவுக்கு அதிகமாகப் போவதைக் கண்டு நான் வருத்தப்படவில்லை; ஆனுல் அவர்கள், நல்ல படங்களைப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 11—7—57 வியாழன்

சுப்பிரமணியத்தின் சிந்தாகுலம்

வரவு—செலவுத் திட்டப் பொது விவாதத்திற்குப் பதிலளித்த நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் நமது முன்னேற்றக் கழகத்திற்குச் சிறப்பான கோரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். ஐந்து அல்லது பத்தாண்டுக் காலத்திற்கு திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டுவிட்டு, தம்முடன் (காங்கிரசுக் கட்சி) ஒத்துழைக்க வேண்டும் என்பதே நிதியமைச்சர் வேண்டுகோளின் உள்ளடக்கமாகும்.

திராவிட நாடு முழக்கத்தை பத்தாண்டுக் காலத்திற்காவது ஒத்திப்போட வேண்டும் என்று நமது முன்னேற்றக் கழகத்தைக் கேட்டுக்கொள்ள வேண்டிய கட்டாயம் நிதி அமைச்சருக்கு ஏன் வந்தது? அதற்கு எது காரணம் என்பது கண்டறியத்தக்கது. அது பற்றி நிதியமைச்சர் திட்டவட்டமாக எதுவும் கூறவில்லை. இருந்தாலும் நுணுக்கமாக என்ன குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, தமிழ்நாட்டு மக்களை எதிர்நோக்கி இருக்கின்ற பிரச்சினைகளையும், அவைகளின் அளவையும் நாட்டுப் பிரிவினையுடன் ஒப்ப வைத்துப் பார்க்குமிடத்து, நாட்டுப் பிரிவினையை உயிர்ப் பிரச்சினையாகத் தம்மால் கொள்ள முடியவில்லை என்கின்றார் அவர்.

எனவே, இந்தத் தருணத்தில் உயிர்ப் பிரச்சினையாகத் தோற்றமளிக்காத நாட்டுப் பிரிவினை முழக்கத்தைப் பத்தாண்டு காலத்திற்கு ஒத்திப்போட்டுவிட்டு, தமிழக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க தம்முடன் ஒத்துழைக்கும்படி நமது முன்னேற்றக் கழகத்தை கூவி அழைக்க நிதி அமைச்சர் முன்வந்திருக்கின்றார்.

அந்த அளவுடனும் அவர் இருந்துவிடவில்லை; மேலும் அதை விளக்கும் வகையில், 'நாம் அனைவரும் ஒன்றுபட்ட இந்தியாவின் உறுப்புகளாக இருந்து, மக்களின் வேலையின்மையையும் வறுமையையும் போக்க உறுதியுடன் முயற்சித்தால் அல்லாது, அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற பிரச்சினை எதற்கும் எந்தக் காலத்திலும் நம்மால் பரிகாரம் தேடிக் கொள்ள முடியாது' என்றும் அழுத்தந்திருத்தமாக நிதி அமைச்சர் அறிவிக்கின்றார்.

நாட்டுப் பிரிவினை முழக்கத்தைப் பத்தாண்டுக் காலத்திற்கு நிறுத்திவைத்துவிட்டு, தமிழக மக்களின் வறுமையை ஒழித்துக்கட்டத் தம்முடன் ஒத்துழைக்க நமது முன்னேற்றக் கழகததைக் கூவி அழைக்கும் அதே மூச்சில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம், நமது கழகத்தின் சுதந்திர முழக்கம் குறித்து நையாண்டிபேசவும் துணிந்துள்ளார்; கழகத்தை எச்சரிக்கவும எச்சரித்துள்ளார் நிதி அமைச்சர். 'வரவிருக்கும் கொஞ்ச காலம் வரையிலாவது நாடு துண்டாடப்படப் போவதில்லை' என்றும், 'துண்டாடப்படுவதை இந்த நாட்டில் உள்ள ஒருவரும் அனுமதிக்கமாட்டார்' என்றும், 'திராவிட நாடு இபக்கம் அவசியமற்றது' என்றும், 'அருத்தமற்றது' என்றும், எந்த முன்னேற்றக் கழகத்தின் ஒத்துழைப்பை கோருகிறாரோ அதே கழகத்தின் மூல இலட்சியமான தேசிய விடுதலை கோரிக்கையை இழித்தும் பழித்தும் கிண்டலாகவும் பேசியுள்ளார் கனம் சுப்பிரமணியம்.

ஒரு மனிதனுக்கு நிலைமையை விளக்கலாம். புரியாத பொருளை ஒருவருக்குப் புரிய வைக்கக்கூடும். ஆனால் ஒருவரின் இயல்பை எப்படி மாற்றிவிடமுடியும்? எனவே நிதி அமைச்சரும், முன்னேற்றக் கழகத்தின் ஒத்துழைப்பை நாடுகின்ற பொழுதே, முன்னேற்றக் கழகத்தின் மூலஇலட்சியத்தைத் தம் இயல்புப்படி நையாண்டி செய்வதில் வியப்பொன்றுமில்லை. நிற்க,

நமது முன்னேற்றக் கழகத்தின் தேசியமுழக்கமான நாட்டு விடுதலைக் கோரிக்கை உயிர்ப் பிரச்சினையாகும் என நிதி அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளதை மேலே எடுத்துக்காட்டி இருக்கின்றோம். ஒரு பகுதி மக்களின் தேசிய விடுதலைக் கோரிக்கையை உயிர்ப்பிரச்சினை என ஒருவர் ஒப்புக்கொண்ட பிறகு, அதை ஐயத்திற்குரிய மற்றொன்றுக்காக காலம் தாழ்த்துங்கள் எனக் கோருவது பொருந்தக் கூடியதா என்பதை நிதி அமைச்சர் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிக் கேட்பது முறையாகுமா? வெற்றி பெறக் கூடுமா?—என்பதையும் நிதி அமைச்சர் நினைத்துப் பார்க்க வேண்டும். நிற்க,

தமிழக மக்களின் நல்வாழ்வைக் கருதிதான் விடுதலைக் கோரிக்கையை நமது முன்னேற்றக்கழகம் முழங்கி வருகிறது. ஆனால் அமைச்சர் சுப்பிரமணியம அவர்களோ, பிரிவினை முழக்கத்தினால்தான் தமிழக மக்கள் வேலையின்மைக்கும, வறுமைக்கும் ஆளாகித் தவிக்கின்றனர் எனப் பொருள்பட சட்டமன்றத்தில் பேசி இருக்கின்றார். எனவே தமிழக மக்களை வாட்டி வதைத்து வரும் வேலையின்மையையும் வறுமையையும் விரட்டியடிக்க, தனது விடுதலைக் கோரிக்கையை பத்தாண்டுக் காலத்திற்காவது கைவிட்டுவிடும்படி முன்னேற்றக் கழகத்தைக் கோர அவர் முன்வந்து இருக்கின்றார்.

நமது முன்னேற்றக் கழகத்தின் விடுதலைக் கோரிக்கையால் தான் தமிழகம் முன்னேற்றம் பெறாது சீரழிந்து வருகிறது என்ற நச்சுக் கருத்தை, தமிழக மக்கள் உள்ளங்களில் பதிய வைக்கவேண்டும் என்பதே நிதி அமைச்சர் சுபபிரமணியம அவர்களின் உள்ளக்கிடக்கையாகும். அத்தகு நச்சுக் கருத்தைத் தமிழக மக்களிடம் பதிய வைத்து விட்டால், தமது கையாலாகாத்தனத்தையும், வடநாட்டு தாசர் புத்தியையும் தமிழகக் கண்களுக்குப் படாமல் மறைத்துவிட முடியும் என நிதி அமைச்சர் கனவு காண்கின்றார். இதுவே அவருடைய சிந்தாகுலம!

மகாரியஸ் பாதிரியார் கோரிக்கை

'தெளிவானது — நியாயமானது'

ஏதன்ஸ், சூலை 9—

"சைப்ரசின் எதிர்காலம் பற்றிய மகாரியஸ் பாதிரியாரின் கருத்துக்கள் தெளிவானவை —நியாயமானவை — நேர்மையானவை"

என்று ஆஸ்திரேலிய தொழிற் கட்சித் தலைவர் டாக்டர் ஹெர்பர்ட் ஈவாட் கூறியிருக்கிறார்.

உறவினர்களை உயர் பதவிக்கு நியமிக்கும் பொதுப் பணித் தேர்வுக் குழு!

ஒரிசா முதன் மந்திரி கண்டனம்

புவனேசுவரம், சூலை 9—

ஒரிசா 'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' மீது, மாநில முதன் மந்திரி டாக்டர் அரிகிருஷ்ண மெகதாப், சட்டசபையில் கடும் தாக்குதல் நடத்தியிருக்கிறார்.

மந்திரிகளைப்போலவே, கமிஷனும், சிபாரிசுகளுக்கு இடமளிப்பதாக அவர் குற்றம் சாட்டியிருக்கிறார்.

ஏழு பேரில் ஐவர்?

"மாவட்ட முன்சீபுகள் தேர்ந்தெடுக்கப்பட்டதில், ஏழு பேர்களில், ஐந்து பேர் சர்வீஸ் கமிஷன் உறுப்பினர்கள்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

1954—55-ம் ஆண்டுக்கான கமிஷனின் அறிக்கை பற்றி சட்டசபை நடத்திய விவாதத்திற்குப் பதிலளிக்கையில், அவர், 'நிர்வாகம், சர்வீஸ் கமிஷன், உயர்நீதி மன்றம் இவை மிக்கப் பொறுப்புடன் இயங்க வேண்டிய மூன்று அமைப்புகளாகும்,' என்றும் எடுத்துரைத்திருக்கிறார்.

"சர்க்கார், கமிஷனின் சிபாரிசுகள் சிலவற்றை ஏற்காமலிருந்திருக்கலாம்; ஆனால் அதற்குக் காரணம், நிர்வாகம் ஒழுங்குடனும் திறமையுடனும் நடைபெற வேண்டும் என்பதுதான். நியமனமாகியுள்ள உத்தியோகங்களின் பட்டியலைப் பார்த்தால், சர்க்கார், கமிஷனின் சிபாரிசுகளில் பெரும்பாலானவற்றை ஏற்றுக் கொண்டிருப்பது தெரியும்"

என்று மெகதாப் சஞ்சலத்தோடு கூறியுள்ளார்.

"சில அதிகாரிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட இலாகா பூர்வமான ஒழுங்கு நடவடிக்கைகளையும் கமிஷன் அமுக்கிவிட்டது; இப்படி நடந்துகொள்வது, திறமையான நிர்வாகத்திற்கு உதவுவதாகாது"

என்றும் வருத்தப்பட்டிருக்கிறார், முதலமைச்சர் மெகதாப்!

விவாவதத்தில் கலந்து கொண்ட ஒரு பி. சோ. கட்சி எம். எல். ஏ., 'சர்க்காரையும் இதேபோல கமிஷன் குற்றஞ் சாட்டுகிறது; அவசர வேலைகளுக்காகத் தற்காலிகமாக அதிகாரிகளை ஒரு ஆறுமாத காலத்திற்கு நியமித்துக் கொள்ளுமாறு சர்க்காருக்கு கமிஷன் தரும் அதிகாரத்தை சர்க்கார் துஷ்பிரயோகம் செய்வதாக வருடா வருடம் குற்றச் சாட்டுகள் எழுகின்றன; சர்க்கார் தன் தவறைத் திருத்திக் கொள்வதாகக்காணோம்; இதனால் தான் 'பட்சமாதமான சர்க்கார்' என்று குற்றஞ்சாட்ட இடமேற்படுகிறது, என்று கூறியிருக்கிறார்.

விடுதலை வீரர்களை சாய்க்க நச்சு வாயுப் பிரயோகம்

பிரெஞ்சு ஏகாதிபத்தியம் அல்ஜீரியாவில் புரியும் கொடுமை

டூனிஸ், சூலை 10—

அல்ஜீரிய விடுதலை வீரர்களின் கிளர்ச்சியை ஒடுகக பிரெஞ்சு ஏகாதிபத்தியம் கையாண்டுவரும் பலவகை மிருகத்தனமான கொடிய அடக்குமுறைகளுள் நச்சுவாயுப் பிரயோகிப்பதும் ஒன்றுக இருக்கிறதாம்!

கூட்டம் ஒன்றில் பேசுகையில் இந்தக் கொடிய அடக்குமுறை பற்றி அல்ஜீரியத் தொழிற் சங்கத் தலைவருள் ஒருவரான ரஷித் பென் அபெலாஜித் என்பார் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

"நான் கூறுவதை எவரேனும் நம்பாவிட்டால் டுனீஷிய மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் அல்ஜீரிய வீரர்களை வந்து பாருங்கள்" என்றும் அவர் அறைகூவியிருக்கிறார்.

"அல்ஜீரியாவில் போர்நிறுத்தம் ஏற்பட உள்ள ஒரே வழி, அல்ஜீரிய மக்களின் சுதந்திர உரிமையை பிரெஞ்சு ஏகாதிபத்தியம் அங்கீகரிப்பதுதான்" என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னெச்சரிக்கையின்றி பாய்ந்து தாக்கினர்

'தடியடி நடைபெறவில்லை'யென்று மறைக்க முயற்சிக்கின்றனர்

ஜோகன்ஸ்பர்க், சூலை 10—

தென்னுப்பிரிக்காவில் நிறைவேற்றப்பட்டுள்ள நிறவெறி சட்டங்களை எதிர்த்து சூன் 26-ந் தேதியன்று நடைபெற்ற கிளர்ச்சியின்போது இந்திய ஆர்ப்பாட்டக்காரர்களை போலீசார் தடிகளைக்கொண்டு தாக்கினர் என்று கூறப்படுகிறது.

'இந்தச் சம்பவத்தைப் பற்றி விசாரணை நடத்தவேண்டும்,' என்று கோரி இந்தியக் காங்கிரஸ் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்துள்ளது.

தடியடியே நடக்கவில்லை என்று கூறுகின்றனராம்.

'போலீசார் எந்தவித முன்னெச்சரிக்கையும் தராது, ஆண்கள்— பெண்கள் — குழந்தைகள் மீது பாய்ந்து தடிகளால் தாக்கினர் என்பதற்குப் போதிய சாட்சிகள் உள்ளன என்றும், இதை சில ஆங்கில ஏடுகளும், பாரபட்சமற்ற பார்வையாளர்களும் உறுதிப்படுத்தக்கூடும் என்றும் காங்கிரஸ் கூறியுள்ளது.

மாநிலங்கள்மீது பழி சுமத்த முன்னேற்பாடா?

இந்தியா சுதந்திரம் பெற்று 10 ஆண்டுகள் கழிந்த பின்னரும்,பல கோடி ரூபாய் செலவிட்டு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிய பிறகும்கூட நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதை உணர்ந்து மத்திய அரசாங்கம் இப்போது அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது.

இதுவரையில் தன் அதிகாரத்தின்கீழ் வைத்திருந்த வேலை தேடித் தரும் நிலையங்களின் நிர்வாகத்தை மாநிலங்களிடம் ஒப்படைக்க டில்லி முடிவுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

பல்வேறு திட்டங்களுக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 1,72,72,000 மத்திய அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

மாநிலங்கள் செயல்படுத்தும் திட்டச் செலவில் 60 சதவிகிதத்தை மத்திய அரசு ஏற்க முன்வந்துள்ளது.

வேலை தேடித்தரும் நிலயங்களை மேலும் திறக்க ரூ.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது திட்ட காலத்தில் மொத்தம் 125 நிலையங்கள் திறப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

டெல்லிக்கு எதிராக போராட!

சர்வ கட்சியினர், மாணவர் தொழிலாளர் அணிவகுப்பு

காங்கிரஸ் தூதுக்குழு மேலிடத்தைச் சந்திக்கும்

★

கௌஹாத்தி, சூலை 10—

அசாமில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை இல்லை என்ற டெல்லியின் உத்தேச முடிவுக்கு எதிராக மாநிலத்தில் உள்ள சகல அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும், மாணவர்களும் இதர பொதுமக்களும் தங்கள் தங்கள் வழியில், போராடுவது பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

இந்த விவகாரத்தில் எல்லாக் கட்சியினரும் ஒரே கருத்தைக் கொணடவர்களாக இருந்து வருகின்றனர்.

காங்கிரசைப் பொறுத்த மட்டில், அண்மையில் காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள், அசாம் மாநில காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களடங்கிய கூட்டம் ஒன்று நடத்தி, பண்டிதர் டெல்லி வந்ததும் அவரையும், இதர மேலிடத்தவரையும் சந்தித்து, அசாமில் அந்தத் தொழிற்சாலையை அமைப்பது பற்றி வாதிடுவதற்காக ஒரு தூதுக் குழுவை அனுப்புவது என்று முடிவு செய்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

நியாயத்தைப் புரிந்து கொள்ளாவிடில் உள்ளத் தூய்மையை உணர இயலாது

வசூலிக்கப்படும் வரிகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவில்லை

சிறிய கிராமங்களை ஒன்றாக இணைப்பதற்குப் பாதைகள் அமைக்கும் திட்டங்கள் வேண்டும்

சட்டசபையில் ஏ.வி.பி.ஆசைத்தம்பி கோரிக்கை

4-6-57 அன்று சென்னை சட்ட மன்றத்தில், வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு தோழர் ஏ, வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது:—

"சென்னை மாநில நிதியமைச்சரும் சர்க்கார் கட்சித் தலைவருமான சி. சுப்பிரமணியம் அவர்களை முதலில் பாராட்ட விரும்புகிறேன். தமிழை ஆட்சிமொழியாக்குவதன் ஆரம்பவேலையாக 'ஸ்ரீ' என்ற வடமொழிப் பதத்திற்குப் பதிலாக 'திரு' என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்படி நான் கேட்டபொழுது, 'அது அவசியமில்லை,' என்று மறுத்த கனம் மந்திரி அவர்கள் அவருடைய வரவு-செலவுத் திட்ட சொற்பொழிவில், 'ஸ்ரீ' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'திரு' என்ற வார்த்தையைப் பயன்படுத்த முன்வந்தமைகண்டு மகிழ்கின்றேன். இந்த நிலை நீடிக்க வேண்டுகிறேன்—நீடிக்குமென நம்புகிறேன்.

"பொதுவாக ஒன்றை முதலிலே ஆட்சேபித்து, பின்னர் அதனை நன்று என்று உணர்ந்து ஏற்க முன்வந்திருக்கின்ற செயலானது, நாங்கள் கொண்டுள்ள கொள்கைகளை இன்றில்லாவிட்டாலும் நாளை கட்டாயம் கனம் மந்திரி அவர்களும், அவருடைய கட்சித் தோழர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற புதிய நம்பிக்கையை எங்களுக்கு உண்டாக்கியிருக்கிறது......"

சி. சுப்பிரமணியம்:— 'திரு' என்ற பதம் இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே நாங்கள் உபயோகப்படுத்திய பதம்தான்; நீங்கள் சொல்லி உபயோகிக்கவில்லை.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி:— 1939-ம் வருடத்தில் நீதிக்கட்சியைச் சேர்ந்த நாங்கள் இந்தக் கிளர்ச்சி ஆரம்பித்த காரணத்தினால், அதுவும் இருக்கலாம் என்று நினைக்கிறேன். எப்படியிருந்தபோதிலும் பொதுவாக எங்களுடைய விமர்னம் எல்லாம் நியாய அடிப்படையிலே இருக்குமே தவிர, துவேஷ அடிப்படையிலே இருக்காது என்பதை அமைச்சரவர்கள் நிச்சயமாகக் காணலாம்; ஆனால், நியாயம் என்றால் என்ன என்பதே புரியாமல் எங்களுடைய தூய உள்ளங்களை தெரிந்துகொள்ளவே முடியாது.

அமைச்சரவர்கள் சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்தை அந்த முறையிலே பரிசீலனை செய்து பார்த்தால் அதுசரித்திரத்திலே—மகாராஷ்டிரர் காலத்தில் சிவாஜி ஆட்சிக் காலத்துக்குப் பின்னால் ஆட்சி நடத்திய பீஷ்வாக்கள் காலத்திய வரவு-செலவுத் திட்டம்போல இருக்கிறது என்பதைக் குறிப்பிடவிரும்புகிறேன்.

"மகாராஷ்டிரர் ஆட்சி காலத்தில் இரண்டாவது மந்திரியாகவும், நிதி மந்திரியாகவும் இருந்தவர்களுக்கு பீஷ்வாக்கள் என்று மாற்றுப் பெயர்கள் கொடுக்கப்பட்டன; அதேமாதிரி கனம் சுப்பிரமணியமும் இரண்டாவது மந்திரியாக இருக்கிறார். அது மாத்திரமல்ல; நிதி மந்திரியாகவும் இருக்கிறார். அதனால்தான், 'அவருடைய வரவு—செலவுத் திட்டம் பீஷ்வாக்கள் காலத்திய வரவு—செலவுத் திட்டம்' என்று சொல்லுகிறேன். பீஷ்வாக்கள் காலத்தில் விதிக்கப்பட்ட வரிக்கும், இன்று விதிக்கப்பட்ட வரிக்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. பீஷ்வாக்கள் ஆட்சி நடத்திய காலத்தில் 'சவுத்' என்ற வரி 4-ல் ஒரு பங்கு தரப்படவேண்டுமென்றும், 'சர்தேஷ்முகி' என்ற வரி 10-ல் ஒரு பங்கு தரப்பட வேண்டுமென்றும் சொன்னார்கள். வரி விதித்து மக்களைக் கொடுமைப்படுத்தினார்களே தவிர வரி வசூலித்த பகுதியிலும் வரி கொடுத்த மக்களுக்கும் அந்தக் காலத்தில் பீஷ்வாக்கள் நன்மை எதுவும் செய்யவில்லை. அதேபோலத்தான், இந்தக் காலத்திலும் வரிகள் போட்டு வசூலிக்கப்படுகிறதே தவிர, சுயராஜ்யம் கிடைத்து 10 ஆண்டுகள் ஆகியும்கூட மக்களுடைய வாழ்க்கைத்தரம் இதுவரைக்கும் உயர்ந்ததாகத் தெரியவில்லை.

"ஒரு 'பட்ஜெட்'டினுடைய உபரித் தொகையை வைத்தோ அல்லது துண்டு விழுகின்ற தொகையை வைத்தோ அதன் தாராதரத்தை நிர்ணயிப்பதாக நீங்கள் நினைப்பது தவறு; அந்த மாதிரி நிர்ணயிக்கவும் கூடாது.

"ஒரு நாட்டிற்கு என்னென்ன தேவை? தேவைக்கேற்ற திட்டங்கள் வரவு—செலவுத் திட்டத்தில் உள்ளனவா? அந்தத் திட்டங்களுக்கேற்ப தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா?—என்பதைப் பொறுத்துத்தான் ஒரு வரவு—செலவுத் திட்டத்தின் தாரதத்தை வரையறுக்கவேண்டுமே தவிர, உபரித் தொகையை வைத்தும், துண்டு விழுகின்ற தொகையை வைத்தும் நாங்கள் எப்பொழுதுமே ஒரு முடிவுக்கு வருவது கிடையாது.

"அந்த முறையில் பார்த்தால் நாட்டிற்கேற்ற திட்டங்கள் இதிலே இப்பொழுது இருப்பதாகச் சொல்வதற்கில்லை. இது, வருடாந்திர வரவு — செலவுத் திட்டம் என்பதை, அதனைத் தயாரித்த மந்திரி அவர்கள் மறந்துவிட்டாரா என்றுகூட நான் ஐயமுறுகிறேன். ஐந்தாண்டுக் காலத்திலே என்னென்ன வருகிறது? 10 ஆண்டுக் காலத்திலே என்னென்ன வருகிறது?— என்பதுதான், இந்த வரவு—செலவுத் திட்ட உரையிலே கண்டிருக்கிறதே தவிர, உடனடியாக இந்த வருடத்திலே மக்களுக்குக் கிடைக்கக் கூடியது என்னவென்று பார்க்கும் பொழுது சர்க்காருடைய வரிதான் வருமே தவிர, வேறு ஒன்றுமே வராது என்ற நிலையில்தான் இந்த வரவு—செலவுத் திட்டம் இருக்கின்றது.

"பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும், தொழில் நிறுவனத் திட்டங்களும் வருகின்றன என்று சொல்லுகிறார்களே தவிர, உடனடியாகப் பலன் தரக்கூடிய சிறிய திட்டங்கள் எதுவுமில்லை.

"உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையில், பம்பாயிலிருந்து மங்களூர் வரையில் பாதைகள் போடுவதற்கெல்லாம் சர்க்காரிடம் திட்டங்கள் இருக்கின்றனவே தவிர சிறிய கிராமங்களை ஒன்றாக இணைக்கின்ற எந்த மாதிரியான திட்டங்களும் இல்லை; பொதுவாக, பொருளாதாரம் நன்றாக உள்ள நாடுகளிலே ஒரு சதுர மைலுக்கு ஒரு மைல் நீளம் உள்ள ரோடுகள் இருக்கவேண்டுமென்று கூறுவார்கள். அந்த முறையில் பார்த்தால், இந்தியாவில் 10 இலட்சம் மைல் நீளமுள்ள ரோடுகள் தேவை; ஆனால் ஒரு இலட்சம் மைல்கள் கூட ரோடுகள் இல்லாத நிலைமை இருக்கின்றது.

"அதே மாதிரி, பெரிய அணைக்கட்டுத் திட்டங்கள் வரப்போகின்றன; அவை வந்தால் நாடு செழிப்பு அடைந்துவிடும்; உற்பத்தி பெருகிவிடும்,' என்றெல்லாம் சொல்கிறார்களே தவிர, சிறு நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றி மந்திரி அவர்கள் திட்டத்திலே சரிவர ஒன்றும் சொல்லப்படவில்லை. அதன் காரணமாகத்தான், சிலர் கலெக்டர்களை அணுகி, கோரிக்கை எழுப்பி அவைகளை அமைத்துக் கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது. இம்மாதிரி சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டுமே தவிர, பெரிய அணைக்கட்டுத் திட்டங்களினால் உடனடியாக மக்களுக்கு நிச்சயம் பலன் கிடைக்கவே கிடைக்காது.

"பெரிய திட்டங்களைப்பற்றிய எங்களுடைய குற்றச்சாட்டுகளுக்கெல்லாம்—'வடக்கே ஒரு மாதிரியாக நடைபெறுகின்றது; தெற்கே வேறுமாதிரியாக நடைபெறுகின்றது என்று சொன்னபோது, மாநில முதலமைச்சர் காமராசர் அவர்கள், 'வடக்கே பெரிய ஜீவ நதிகள் இருக்கின்றன; ஆனால் தெற்கே என்னுடைய தொகுதியிலே கௌசிகமகாநதி என்ற வறண்ட நதிதான் இருக்கின்றது; என்ன கட்ட முடியும்?' என்று கேட்கிறார். வடக்கிலுள்ளதுபோல் இங்கே ஜீவநதிகள் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டபிறகு இந்த சர்க்கார் செய்ய வேண்டிய முதல் கடமை, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை மாவட்ட வாரியாக-தாலுகா வாரியாக அமுலாக்க வேண்டியதுதான்.

"எங்கே ஏரிகள் செப்பனிடப்படவேண்டும்—புதிய ஏரிகள் கட்டப்படவேண்டும் — குளங்கள் வெட்டப்படவேண்டும் என்பதை சரிவர 'சர்வே' செய்து, அந்த வேலைகளை உடனடியாகச் செய்யவேண்டும். அப்படிச செய்யாமல் விட்டுவைத்திருப்பது எவ்வளவு பெரிய நஷ்டம் என்பதை சர்க்கார் யோசித்ததாகத் தெரியவில்லை.

"ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், அரியலூர் இரயில் விபத்து நடந்தது எல்லோருக்கும் தெரியும். அதில் நூற்றுக்கணக்கான மக்கள் இறந்தார்கள்; 'அரியலூர் விபத்துக்குக் காரணம்,' இந்த சர்க்கார்தான் என்று நாங்கள் குற்றம் சாட்டியபொழுது முதல் அமைச்சரவர்கள் 'எப்படி நாங்கள் குற்றவாளிகள் ஆகமுடியும்? எங்களுக்கு ஜோசியமா தெரியும்?' என்று கேட்டார். நாங்கள் பொறுப்பற்ற முறையில் குற்றம் சாட்டுவதாக யாரும் கருதவேண்டாம். அரியலூர் பாலம் சேதம் அடைந்ததற்கு பெரிய மழை அல்ல காரணம்; பெரிய மழையின் காரணமாக ஏரி உடைப்பெடுத்துக் கொண்டதால்தான் உடனடியாக பாலம் சேதமடைந்தது. அந்த ஏரி உடைந்ததற்குக் காரணம் யார் என்று பார்த்தால், இந்தச் சர்க்கார் ஏரிகளைச் சரிவர செப்பனிடாத காரணம்தான் என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

"அதேபோன்று இராமனாதபுரம் மாவட்டத்தில் புயலும், மழையும் ஏற்பட்டபோது, பெரிய ஏரிகள் உடைப்பு எடுத்துக் கொண்டதற்குக் காரணம், அவைகள் செப்பனிடப்படாததுதான். மங்கம்மாள் காலத்தில் வெட்டப்பட்ட ஏரிகளும், குளங்களும் அப்படியே மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. இந்த சர்க்கார் அவைகளைக் கண்காணிப்பதே இல்லை.

"இவர்கள், பெரிய அணைக்கட்டு திட்டங்களில்தான் தங்கள் கண்ணோட்டத்தைச் செலுத்துகிறார்களே தவிர, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி கவலைப்படுவது கிடையாது. அந்தக் காலத்து சோழ மன்னர்களை சரித்திர ஆசிரியர்கள் 'Bank of the People' என்று குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் ஆட்சியினரை எதிர்கால சரித்திர ஆசிரியர்கள் Explaters of the People' —மக்களைச் சுரண்டுகிறவர்கள்,' என்று குறிப்பிடும் நிலைமை இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"வடக்கே இருக்கிற நிதிமந்திரி ஒரு வரி, தெற்கே இருக்கிற நிதி மந்திரி ஒரு வரி என்று வரிகள் போடப்படுகின்ற காரணத்தினால் இவைகளைச் சேர்த்து சரிவரத் திட்டங்கள் போட முடியவில்லை.

"ஐந்தாண்டுத் திட்டம் வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை; ஆனால், ஐந்தாண்டுத் திட்டங்களிலே டெல்லியில் உருவாகும் திட்டங்களுக்கு இங்கே வரியும், இங்கே செய்யப்படுவதற்கு டெல்லியில் வரியும் விதிக்கின்ற நிலைமை நீடிக்கக் கூடாது. ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்களுக்கு என்ன பலன் கிடைக்கிறது? ஒவ்வொருமாநிலத்திற்கும் என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்—ஸ்தாபனங்கள் நிறுவப்பட வேண்டும்? அவைகளுக்கு என்ன செலவு ஆகும் என்றெல்லாம் பிரித்து எடுத்து கணக்குப் பார்த்து, 'Betterment Tax' அபிவிருத்தி வரி, கடனளிப்பு என்ற முறைகளிலே வரிவசூல் செய்து திட்டங்களை நிறைவேற்றினால், மக்கள் இவ்வளவு வரிகள் கொடுக்க வேண்டியிருக்காது; நிர்வாகச் சிக்கல்களுமிருக்காது.

"எனவே, இந்த நாட்டிற்கு நல்லது வரவேண்டும் என்று சொன்னால், இன்றைக்கு இருக்கின்ற அரசியல் அமைப்பையே மாற்றி, இங்கு கிடைக்கின்ற வருமானங்கள் வடக்கே செல்லாமல் தடுத்து இங்கேயே வைத்து, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் மக்களின் உடனடியான தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்."

'சூலை-7: பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிடும் நாள்' ஊர்வலத்தில் வடசென்னை கழகத் தோழர்களும், தென்சென்னை கழகத் தோழர்களும் ஊர்வலமாகச் செல்லும் காட்சி!



வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ். சி. சி. அந்தோணிப்பிள்ளை அவர்களிடம், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'முறையீட்டு' மடலை அளிக்கும் காட்சியும்; தென்சென்னை பாராளுமன்ற உறுப்பினரும் மத்திய நிதி மந்திரியுமான டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் தனிச் செயலாளர் அனந்தாச்சாரியிடம் தோழர் அ. பொ. அரசு அவர்கள் 'முறையீட்டு' மடலை அளிக்கும் காட்சியும்;

—புகைப்படம்: சாமுவேல்

'மதுவிலக்கை தி. மு. க. ஆதரிக்கிறது'

'திட்டத்தை அமுல்நடத்துவதுசரிவர நடைபெறவில்லை'

சட்டசபையில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. கோவிந்தசாமி முழக்கம்

சென்னை, ஜூலை 10—

கலால் இலாகாவுக்காக ரூ. 6,66,300 மானியம் அனுமதிக்க வேண்டுமென்று இன்று சென்னை சட்டசபையில் உள்விவகார அமைச்சர் பக்தவத்சலம் கோரினார்.

வெட்டுப் பிரேரபணை மீது பேசுகையில் கழக உறுப்பினர்களான ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. கோவிந்தசாமி ஆகியோர் காங்கிரஸ் மேற்கொண்டுள்ள இந்தப் பணியில் தி. மு. கழகம் காட்டிவரும் ஆர்வத்தையும், அண்ணா அவர்கள் எடுத்து கூறிவரும் அரிய கருத்துக்களையும் எதிரொலிக்கச் செய்துள்ளனர்.

அமைச்சர் தனது முடிவுரையில், தி. மு. கழகத்தின் ஆதரவை எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகக் கூறாமல், 'திட்டத்தை ஆதரிக்கும் எதிர்க்கட்சிகள் தீவிரமாக மக்களிடையே பிரச்சாரம் செய்து அரசாங்கத்திற்கு உதவியளிக்கவேண்டும்,' என்றுமட்டுமே கூறினார்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் மானியக் கோரிக்கையின் மீது பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மதுவிலக்குத் திட்டத்தைப் பற்றி நாங்கள் ஏற்கனவே கூறி வந்துள்ளோம். திட்டத்தைச் சரிவர அமுல் நடத்தவில்லை என்று பலமுறை எடுத்துக்காட்டி வந்துள்ளோம். இந்த நாட்டில் வாழும் ஏழைகள் நன்மை அடைய வேண்டும் என்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் மற்ற எல்லாவற்றிலும் காட்டிவரும் அக்கறையை இந்தப் பிரச்சினையிலும் சற்று தீவிரமாகவே காட்டிவந்துள்ளது.

"ஏழைகள் நன்றாக வாழ வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது; குடியை ஒழித்துவிட்டதாகக் கூறப்படுகிறது; ஆனால் மக்கள், அதற்குப் பதிலாக சோடா, கலர், தேநீர் குடிக்கவும், சினிமா பார்க்கவும், ஆடம்பரமான முறைகளில் நாட்டம் கொள்ளவும் முற்பட்டுவிட்டார்கள் என்றே சொல்லவேண்டும்.

இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்குமுன் அரசாங்கத்திற்கு ரூ. 18 கோடி வருமானம் கிடைத்தது என்றால், மொத்தம் குறைந்த அளவு 100 கோடி ரூபாயை ஏழை மக்கள், குடிக்காக செலவிட்டிருக்கவேண்டும் என்றே மதிப்பிடவேண்டும். இவ்வளவு பெரிய தொகையை மக்கள் இப்போது எப்படிச் செலவிடுகிறார்கள்? என்ன நன்மை யடைந்துள்ளனர்? அவர்கள் வாழ்க்கை எந்த அளவு முன்னேறியுள்ளது என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

"மதுவை அருந்துவதால் ஏழை மக்கள் பணத்தை வீணாக்கிறார்கள் —பாழாக்குகிறார்கள்— கெட்டுப் போகிறார்கள் என்றுதானே சட்டம் கொண்டுவந்தோம்? இப்போது எந்த அளவு அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள்? நன்மையடைந்திருக்கிறார்கள்? பணத்தை மிச்சப்படுத்தி இருக்கிறார்கள் என்று பார்த்தால் ஒன்றுமே காணோம்; அந்தப் பண மிச்சத்தினால் அவர்கள் வாழ்க்கை முன்னேறி இருக்கிறதா என்றால், 'இல்லை' என்றே சொல்லவேண்டும்; இது குறித்து நன்றாக யோசித்துப் பார்த்தால், அந்தப் பணம் வெளிநாடுகளுக்குப் போகிறது என்பது தெரியவரும்; இதைத் தடுக்கவேண்டும்; அந்தப் பணம் ஏழைகளுக்கு பயன்படும்படி செய்யவேண்டும்; அந்தப் பணம் இந்த நாட்டிலேயே இருப்பதற்கான வழிகளை செய்யவேண்டும்.

"மதுவிலக்கை அமுல் செய்வதற்கான இந்த திட்டம் சரியாக திட்டப்படவில்லை. 'கள் இறக்குவது கூடாது,' என்று தடுத்த நேரத்தில், அதனால் மரமேறிகளுக்கு மாற்று வேலைத் திட்டத்தை சரிவர செய்யவில்லை. ஆரம்பத்திலிருந்தே இந்த மதுவிலக்குத் திட்டத்தினால் வேலை இழந்தவர்களின் குறைகளைக் கவனிக்க அரசாங்கம் போதிய அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை.

"அவர்களுக்கு சலுகைகள் தந்து, வேலை கொடுத்து, கல்வி புகட்டி முன்னேற்றமடையச் செய்யவேண்டும்.

"இப்போது மதுவிலக்குக் குற்றங்களுக்குத் தரப்படும் தண்டனை சரிவர இல்லை; அதை மாற்றியமைக்கவேண்டும். இந்தத் திட்டத்தை சரிவர அமுல் செய்து வெற்றிகாண வேண்டும் என்று அரசாங்கம் உண்மையில் விரும்பினால், இந்தத் திட்டத்தை ஆதரிக்கும் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற்று, குழு ஒன்றை நிறுவி நல்ல ஆலோசனைகளைக் கேட்க அரசாங்கம் முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

★

ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"காங்கிரஸ் கட்சி மக்களுக்குச் செய்யும் நல்ல காரியங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் தன் ஆதரவையும், ஒத்துழைப்பையும் நிச்சயம் தரும். சென்னை அரசாங்கம் கொண்டு வந்துள்ள மதுவிலக்குத் திட்டம் நாட்டு மக்களுக்கு மிகவும் அவசியமானதாகும் என்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தாகும். இந்தத் திட்டத்தை என்னுடைய கட்சி ஆதரிக்கிறது; ஆனால், சட்டத்தை நிறைவேற்றி விட்டால் மட்டும் மக்களுக்கு நன்மை ஏற்பட்டுவிடாது; நிறைவேற்றப்பட்ட சட்டம் சரிவர அமுல் செய்யப்படுகிற முறையில் சில கோளாறுகள் இருக்கிறது. அதைப் போக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

"நமது மாநிலத்திற்குத் தொடர்பாக உள்ள புதுவைப் பகுதியில் மதுவிலக்கு அமுலில் இல்லை; இதனால், நாம் சட்டம் இயற்றியும் எதிர்பார்த்த பயன் ஏற்படவில்லை. கள்ள கடத்தல் மூலம் பல தவறுகள் ஏற்படுகிறது. எனவே, புதுவை எல்லைப் பகுதியில் நல்ல பலமான கண்காணிப்பு வேண்டும். போலீஸ் இலாகா போதுமான நடவடிக்கை எடுத்துக்கொண்டு, திருட்டுத்தனமாகப் புதுவையிலிருந்து வரும் கள்ளக் கடத்தலைத் தடுக்க வேண்டும்.

"ஏதோ ஜோதி அம்மையார் அமைச்சராக இருந்தகாலத்தில் ஒரு முக்கிய வழக்கு நடைபெற்றதையே பெருமையாகப் பேசிப் பயனில்லை. இதனால் திட்டம் வெற்றி பெற்றதாகக் கூற முடியாது.

"மதுவிலக்குச் சட்டம் அமுல் செய்யப்படும் இந்தக் காலத்தில் ஒரு சிலருக்கு மட்டும் குடிக்க அனுமதி தருவது கூடாது; இப்போது உடல் நலத்தைக் காரணம் காட்டி பல பணக்காரர்கள் குடிப்பழக்கத்தைத் தொல்லையில்லாமலும், அஞ்சவேண்டிய அவசியமில்லாமலும் தொடர்ந்து நீடிக்கச் செய்யவே இப்போதைய திட்டம் பயன்படுகிறது. இம்மாதிரி 'பர்மிட்' (அனுமதி) முறை முழுவதுமாக ரத்து செய்யப்பட வேண்டும்; திட்டத்தின் வெற்றிக்கு இது வழி வகுக்கும். அதுமட்டுமின்றி, இந்தத் திட்டத்தில் எல்லா முற்போக்குக் கட்சிகளும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்குத் தயாராக உள்ளன. இந்தச் சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

சென்னை சட்ட சபையில் அண்ணாவின் 'நல்லதம்பி'

காங்கிரஸ் 'கொரடா'வுக்கு கழகக் 'கொரடா' நினைவுறுத்தினர் !

சென்னை, ஜூலை 10—

இன்று சட்டசபையில் கலால் இலாகாவிற்காக அமைச்சர் கோரிய மானியத்தை ஆதரித்து காங்கிரஸ் சட்டசபை கட்சியின் 'கொரடா' பி. ஜி. கருத்திருமன் பேசுகையில், "தி. மு. கழகம் மதுவிலக்குத் திட்டத்தை ஆதரிக்கிறது; 'மதுவைத் தொடக்கூடாது' என்று சினிமா மூலம் மக்களுக்குப் பிரச்சாரம் செய்யும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது" என்று கூறினார்.

உடனே, கழக சட்டசபைக் கட்சிக் 'கொரடா'வான தோழர் மு. கருணாநிதி அவர்கள் குறுக்கிட்டு 'கனம் அங்கத்தினர் தி. மு. கழகத்திற்கு யோசனை கூறுவதற்கு முன்பு எங்கள் வரலாற்றினைத் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன்; பல ஆண்டுகளுக்கு முன்பே அண்ணா அவர்கள் எழுதிய 'நல்லதம்பி' என்ற சினிமாப் படம், சிறந்த மதுவிலக்குப் பிரச்சாரப் படம் என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும்," என்று பணிவுடன் தெரிவித்துக் கொண்டார்.

பி. அண்டு சி. ஆலை தி. மு. க. தேர்தல் நிதிக் குழு உறுப்பினர்களுக்கு :

13-7-57 பிற்பகல் 2-மணிக்கு திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றப் பணிமனையில் மேற்படி நிதிக்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, வரவு-செலவு சரிபார்த்தல், நிதிக் குழுவைக் கலைத்தல்பற்றி ஆராயப்படும்.

பழனி நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு :

13-7-57 பிற்பகல் 3-மணிக்கு, மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் பழனி—கே. வி. கே. சாமி நினைவு படிப்பகத்தில், மதுரை தோழர் எஸ். முத்து அவர்கள் தலைமையிலும், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும்; அதுபோது நகரக் கழகத்திற்குப் புதிய நிருவாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

****

எழும்பூர் தொகுதி தேர்தல் வழக்கு நிதி

சிறப்புக் கூட்டம்

★

சென்னை - கோகலே மண்டபத்தில்

13—7—57 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு

★

தலைவர் :

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.

பேச்சாளர்கள் :

அண்ணா

க. அன்பழகன், மு. கருணாநிதி

மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் பேசுவர்.

பொருள் : 'வரவும் - செலவும்'

கட்டணம் : ரூ. 1, அணா 8.

****

கழகக் கூட்டங்கள்

★

மன்னார்குடி—எட. கீழையூர்
கொடி மரத்தடியில்
13—7—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் :
கோ. நடராசன்
பேசுவோர் :
என். வி. நடராசன்
ப. நாராயணசாமி
சு. நாராயணசாமி
இர. கணேசன்
கு. பாலகிருட்டினன்
கி. வ. துரையரசன்

★

சோழபுரம்—அம்மம்பேட்டை
காளியம்மன் கோயில் தெருவில்
13—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : ச. சேகநாதன்
பேசுவோர் :
டி. கே. சீனிவாசன்
பொ. தருமன்
எஸ். ஏ. துரை

★

பழனி
அண்ணா திடல்
(தேரடிக்குக் கீழ்புறம்)
13—7—57 மாலை 6 மணிக்கு
பேசுபவர்: சி. பி. சிற்றரசு

★

கோம்பை
(மதுரை மாவட்டம்)
13—7—57 மாலை 6½ மணிக்கு
தலைவர் : மதுரை எஸ். முத்து
பேசுவோர் :
நாஞ்சில்-கி. மனோகரன்
மு. வசனப்பித்தன்
வெற்றியோன்

★

நெல்லிக்குப்பம்—பெருமாள்நாயக்கன் பாளையம்
இரயில்வே கேட் அருகில்
13—7—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் திறப்புவிழா
தலைவர் :
இரே. இளம்வழுதி
பேசுவோர் :
தம்பிதுரை
கே. ஆர். சபாபதி
எம். வேலு
எம். சண்முகம்
நாராயணன்
தர்மராசலு
பாடல்கள் : எம். சக்கரபாணி

திருத்தம்

நேற்றைய (10—7—57) இதழில் திருக்கோவிலூரில் 12-7-57 காலையில் நடைபெறும். வட்டக் கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் பொதுச்செயலாளர் அவர்கள் கலந்து கொள்வதாக வந்துள்ள செய்தி தவறாகும்; பொதுச்செயலாளர் அவர்கள் மாலைப் பொதுக் கூட்டத்தில் மட்டும் கலந்து கொள்வார் என்பதை தோழர்கள் அறிய வேண்டுகிறோம்.

தென் உணவு மண்டலம்!

நான்கு மாநிலங்களும் இணைக்கப்பட்டுள்ளன

புதுடில்லி, ஜூலை 10—

ஆந்திரம், தமிழ்நாடு, மைசூர், கேரளம் அடங்கிய தென் (அரிசி) மண்டலம் அமைக்கப்பட்டிருப்பதாக டெல்லி சர்க்கார் அறிவித்திருக்கிறது.

இந்த அமைப்பினால், மண்டலத்திற்குள் எங்கு வேண்டுமானாலும் அரிசி எடுத்துச்செல்ல முடியும்.' ஆனால் மண்டலத்திற்குள்ளிருந்து ஏற்றுமதி செய்யவோ மண்டலத்திற்குள் இறக்குமதி செய்யவோ சிலக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

திருச்சி 10-வது வட்டம் மஜீத் மன்ற துவக்க விழா

இரா. நெடுஞ்செழியன்

கலந்துகொள்வார்

13—7—57 சனியன்று மாலை 6 மணிக்கு, திருச்சி—உறையூர் பங்காளித் தெருவில், மேற்படி மன்றத் துவக்க விழா, சோழர் எப். எஸ். ஏ. அஜிஸ் தலைமையில் நடைபெறும்; அதுபோது, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர்கள் அன்பில்-தருமலிங்கம், எம். எஸ். மணி, எஸ். ஏ. ஜி. ராஜ் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திருக்கோவிலூருக்கு இரா. நெடுஞ்செழியன்

வருகை

12—7—57 வெள்ளியன்று மாலை 6-மணிக்கு, திருக்கோவிலூர் மார்க்கெட் தெருவில்—தி. மு. கழகச் சார்பில், தோழர் டி. என். ஜி. அண்ணாமலை அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; அதுபோது, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., சி. நடராசன் எம். எல்.ஏ ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.